**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 14–ஆம், நாள் வியாழன்கிழமை**
**CNR No.TNTI12-000145-2022**
**இடைநிலை மனு எண்.570/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.118/2022**

பழனிசாமி

... மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

முரளிதரன்

...எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு இறுதியாக 23.08.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எல்.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.பிரசன்னா அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கு முடியும் வரை மனு சொத்தில் மனுதாரர் அமைதியான முறையில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதை எதிர்மனுதாரரோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, வேலையாட்களோ, எதிர்மனுதாரர் மூலம் உரிமை

கோரும் வேறு நபர்களோ எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1, 2-ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம்:-</u>**

2.1.) மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரருக்கு எதிராக செயலுறுத்து கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் மனு சொத்தை கடந்த 26.02.2023 தேதியில் கருப்புசாமி மற்றும் பலரிடமிருந்து உரிய மறுபயன் கொடுத்து கிரையம் பெற்றுள்ளதாகவும், அதில் மனுதாரருக்கு வண்டித்தட உரிமை வாரி கொப்பு வாய்க்கால் மற்றும் விவசாயம் செய்வதற்கான உரிமைகளை கொடுத்துள்ளதாகவும், அவைகள் மேற்படி ஆவணத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட உரிமைகளை விவசாயம் செய்வதற்காக நீடனுபவ உரிமையாக மனுதாரர் பயன்படுத்தி வருவதாகவும், வருவாய் ஆவணங்கள் மனுதாரர் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மனு சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து தனக்கு வழங்கப்பட்டுள்ள வசதி உரிமை அடிப்படையிலான உரிமைகளை தன்னுடைய ஆவணப்படி அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) எதிர்மனுதாரர் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் என்றும்,

எதிர்மனுதாரரின் மகள் ஆர்த்திஸ்ரீ என்பவர் இந்த எதிர்மனுதாரருக்கு கடந்த 30.03.2015–ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளதாகவும், இது வரை மனுதாரர் காலை எண்.203–ல் மேற்கு மற்றும் தென்புற பகுதியில் உள்ள கிழமேல் வண்டித்தடத்தை பயன்படுத்தி வருவதாகவும், வாரி, வாய்க்கால், கொப்புமதகு வாய்க்கால் ஆகியவை காலை 203–ல் உள்ளதாகவும், எதிர்மனுதாரர் இதுநாள் வரையில் மேற்படி உரிமைகளை மனுதாரர் அனுபவிப்பதை இடையூறு செய்யவில்லை என்றும், எதிர்மனுதாரரின் முந்தைய உரிமையாளர்கள் மனுதாரரின் மேற்படி உரிமைகளை இடையூறு செய்யவில்லை என்றும், தீடிரென கடந்த 14.06.2022 தேதியில் எதிர்மனுதாரர் சட்டத்திற்கு புறம்பாக மனுதாரரின் வண்டித்தட உரிமை மற்றும் வாரி, வாய்க்கால், கொப்புமதகு வாய்க்கால் ஆகியவைகளை நீடனுபவ உரிமைப்படி மனுதாரர் பயன்படுத்துவதை மூட முயற்சி செய்ததாக கூறப்பட்டுள்ளது.

2.3.) மனுதாரர் அதிர்ச்சியுற்று சேவூர் காவல் நிலையத்தில் கடந்த 15.06.2022 தேதியில் CSR No.158/2022–ன்படி புகார் கொடுத்துள்ளதாகவும், போலீசார் எதிர்மனுதாரரிடம் சேர்ந்து கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மனுதாரரை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர அனுப்பிவிட்டதாகவும், மனுதாரர் மாதிரி வரைப்படத்தினை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரச்சனைக்குரிய வண்டித்தட பகுதி, மதகு வாய்க்கால் பகுதி ஆகியவை பச்சை வண்ணத்தில்

காண்பிக்கப்பட்டிருப்பதாகவும், அதனை இந்த மனுவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மனுதாரருக்கு வேறுவழியின்றி நீதிமன்றத்தை அனுகி வழித்தட உரிமைக்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், மதகுவாய்க்கால், வாரிவாய்க்கால் ஆகியவற்றினை மீண்டும் அமைக்க செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கினை தொடர்ந்து இடைபரிகாரமாக இந்த மனுவினை தொடர்ந்துள்ளதாக அமைந்துள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–</u>

3.1.) மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ள சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும், மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றும், பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் சுயதேவைக்காக கூறப்பட்டவை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள நீடனுபவ உரிமை உள்ளதாக உரிமை கோரும் 26.02.2013 தேதியிட்ட கிரைய ஆவணமானது சுயதேவைக்காக உருவாக்கப்பட்டவை என்றும், அந்த ஆவணத்தின்படி மனுதாரருக்கு நீடனுபவ உரிமை எதுவும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

3.2.) நீடனுபவ உரிமை தனக்கும் தன்னுடைய முந்தைய விற்பனையாளருக்கும் உள்ளது என்பதை மனுதாரர் தான் நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரரின் முந்தைய உரிமை ஆவணங்களில் அது போல் நீடனுப

உரிமை குறிப்பிடப்படவில்லை என்றும், அந்த ஆவணம் சுயதேவைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் கூறப்பட்டுள்ளவைகளை சந்தேகத்திற்கு இடமில்லாமல் மனுதாரர்தான் நிரூபிக்க வேண்டும் என்று இந்த எதிர்மனுதாரருக்கு கடந்த 30.03.2015 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் காலை 187, 203-ல் நிலம் உள்ளது என்றும், ஆனால் மனு பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றும், மனுதாரர் காலை எண்.203-ல் மேல்புறத்திலும், தென்புறத்திலும் கிழமேலாக செல்லும் வண்டித்தடத்தை பயன்படுத்தி வந்ததாக கூறுவது முழுமையான பொய் என்று கூறப்பட்டுள்ளது.

3.3.) மனுதாரர் உரிமை கோருவது போல ஒரு வண்டித்தடம் காலை எண்.203-ல் இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரர் அந்த வண்டித்தடத்தை உபயோகிப்பதை இதுவரையில் இடையூறு செய்யவில்லை என்பது பொய் என்றும், எதிர்மனுதாரரின் முந்தைய உரிமையாளர்களும் அந்த வண்டித்தடத்தை அனுபவிக்க இடையூறு செய்யவில்லை என்று கூறுவது பொய் என்றும், மேற்கண்ட பொருண்மைகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பாக அடிப்படை ஆதாரம் இன்றி கூறப்பட்டுள்ளது என்றும், 7, 8 பத்தியில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றும், இந்த எதிர்மனுதாரர் சட்டத்திற்கு முரணாக வண்டித்தடத்தை மூடவும், வாரி வாய்க்கால், கொப்பு மதகு வாய்க்கால் ஆகியவற்றினை இடிக்கவும்

முயற்சி செய்ததாக கூறுவது பொய் என்றும், உண்மையில் இந்த எதிர்மனுதாரருக்கு காலை எண்.203-ல் 1.86 ஏக்கர் பூமியும் காலை எண்.187-ல் 3.85 ஏக்கர் பூமியும் செட்டில்மெண்ட் ஆவணம் எண்.3682/2015 மூலமாக எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும், செட்டில்மெண்ட் தேதியிலிருந்து இந்த எதிர்மனுதாரர் தொடர்ச்சியாக சொத்தினை அனுபவித்து வருவதாகவும், வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட ஆவணத்திற்கு முன்பாக கடந்த 07.05.1999-ல் எதிர்மனுதாரரின் மகள் இளவராக இருந்த போது அவரது பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளதாகவும், அந்த ஆவணத்திலிலும் காலை எண்.203-ல் எந்த வண்டித்தடமும் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

3.4.) எதிர்மனுதாரரின் மகள் உரிமை வயது அடைந்த பிறகு அச்சொத்தினை எதிர்மனுதாரருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதாகவும், எதிர்மனுதாரரின் மகள் பெயரில் கடந்த 07.05.1999 தேதியில் கிரையம் பெற்ற பிறகு 1, 2 மாதங்களுக்குள் சொத்தினை சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு வேலி அமைக்கப்பட்டு 23 வருடங்களுக்கு மேலாகிறது என்றும், மேற்கண்ட சூழ்நிலையில் காலை எண்.203-ல் கிழமேல் வண்டித்தடம் செல்வதாக கூறியிருக்கும் வாதியின் கூற்றானது முர்க்க தனமான பொய்யே தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், பாகபிரிவினை ஆவணம் மூலமாக ஒரு திருமலைசாமி

மற்றும் அவர் மகனுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை இந்த எதிர்மனுதாரரின் மகள் கிரையம் பெற்றிருப்பதாகவும், மேற்படி சொத்தானது திருமலைசாமி மற்றும் அவரது சகோதரர்களுக்கு மூதாதையர் சொத்து என்றும், பாகபிரிவினையில் " ஏ " அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், திருமலைசாமிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் அவர் காலை 203-ல் 1.86 ஏக்கரையும், காலை 187-ல் 3.85 ஏக்கரையும் ஆர்த்திஸ்ரீக்கு விற்பனை செய்துள்ளதாகவும், அந்த பாகபிரிவினை ஆவணத்திலும் காலை 203-ல் வண்டித்தடம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றும், காலை 203-ஐ சுற்றிலும் கடந்த 23 ஆண்டுகளுக்கு மேலாக வேலி அமைக்கப்பட்டு இருந்து வருவதை மனுதாரருக்கு தெரியும் என்று கூறப்பட்டுள்ளது.

3.5.) இந்த எதிர்மனுதாரர் தன் சொத்தினை விற்பனை செய்ய பார்த்த போது அதனை இந்த மனுதாரர் குறைந்த விலைக்கு கேட்டதாகவும், இந்த எதிர்மனுதாரர் அதற்கு மறுத்து விட்டதால் எதிர்மனுதாரருக்கு அழுத்தம் தரவேண்டி முதல் படியாக தவறான இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கினை உருவாக்குவதற்காக மனுதாரர் காவல் நிலையத்தை அனுகியிருப்பதாகவும், காவல் நிலையத்தில் போலீசார் ஆவணங்களை சரிபார்த்து விட்டு மனுதாரரின் கோரிக்கையை நிராகரித்து விட்டதாகவும், எதிர்மனுதாரரை தொந்தரவு செய்ய வேண்டி இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரரின்

மனுவில் முதல் தோற்ற வழக்கும் வாய்ப்புகளின் சமநிலைமையும், மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்றும், இம்மனுவினை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-</u>**

5.1.) அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க இம்மனுவின் மனுதாரரை வாதி என்றும், எதிர்மனுதாரரை பிரதிவாதி என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக வாதி தொடர்ந்துள்ளார்.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 39 விதி 1, 2 வகைமுறையை இவ்விடத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**<u>கட்டளை 39 விதி 1, 2</u>**

1. Cases in which temporary injunction may be granted
Where in any suit it is proved by affidavit or otherwise-
(a) that any property in dispute in a suit is in danger of being wasted, damaged or alienated by any party to the suit, or wrongfully sold in execution of a decree, or
(b) that the defendant threatens, or intends, to remove or dispose of his property with a view to defrauding his creditors,
(c) that the defendant threatens to dispossess, the plaintiff or otherwise cause injury to the plaintiff in relation to any property in dispute in the suit,
the Court may be Order grant a temporary injunction to restrain such act, or make such other Order for the purpose of staying and preventing the wasting, damaging, alienation, sale, removal or disposition of the property or dispossession of the plaintiff, or otherwise causing injury to the plaintiff in relation to any property in dispute in the suit] as the Court thinks fit, until the disposal of the suit or until further Orders.
2. Injunction to restrain repetition or continuance of breach;
(1) In any suit for restraining the defendant from committing a breach of contract or other injury of any kind, whether compensation is claimed in the suit or not, the plaintiff may, at any time after the commencement of the suit, and either before or after judgment, apply to the Court for a temporary injunction to restrain the defendant from committing the breach of contract or injury complained, of, or any breach of contract or injury of a like kind arising out of the same contract or relating to the same property or right.
(2) The Court may be Order grant such injunction, on such terms as to the duration of the injunction, keeping an account, giving security, or otherwise, as the Court thinks fit.

5.3.) **மாண்புமிகு உச்ச நீதிமன்றம்** In Dalpat Kumar v. Prahlad Singh (1992) 1 SCC 719 , a Bench of two Judges of Hon'ble Apex Court held that the phrases "prima facie case", "balance of convenience" and "irreparable loss" are not rhetoric phrases for incantation but words of width and elasticity, intended to meet myriad situations presented by men's ingenuity in given facts and circumstances and should always be hedged with sound exercise of judicial

discretion to meet the ends of justice. The court would be circumspect before granting the injunction and look to the conduct of the party, the probable injury to either party and whether the plaintiff could be adequately compensated if injunction is refused. The existence of prima fade right and infraction of the enjoyment of him property or the right is a condition for the grant of temporary injunction. Prima facie case is not to be confused with prima facie title which has to be established on evidence at the trial. Only prima facie case is a substantial question raised, bona fide, which needs investigation and a decision on merits. Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in "irreparable injury" to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. Irreparable injury, however, does not mean that there must be no physical possibility of repairing the injury but means only that the Injury must be a material one, namely one that cannot be adequately compensated by way of damages. The balance of convenience must be in favour of granting injunction. The court while granting or refusing to grant injunction should exercise sound judicial discretion to find the amount of substantial mischief or injury which is likely to be caused to the parties if the injunction is refused and compare it with that which is likely to be caused to the other side if the injunction is granted. If on weighing competing possibilities or probabilities of likelihood of injury and if the court considers that pending the suit, the subject matter should be maintained in status quo, an injunction would be issued. The court has to exercise its sound judicial discretion in granting or refusing the relief of ad interim injunction pending the suit." **– என்று கருத்து செறிவுமிக்க**

முன் தீர்ப்பு வழங்கியுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.

5.4.) மேற்கண்ட சட்ட வகைமுறைப்படியும் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின்படியும், வாதிக்கு ஆதரவாக 1.முதல் தோற்ற வழக்கு 2.வாய்ப்புகளின் சமநிலைமை 3.ஈடுசெய்யமுடியாத இழப்பு ஆகியவை இருந்தால் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியுடையவர் ஆவார். வாதிக்கு தாவா சொத்தானது 26.02.2013 தேதியிட்ட கிரைய ஆவணப்படி பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்தை கிரையம் பெற்ற தேதியிலிருந்து வாதி சுவாதீனத்திலிருந்து வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றி அனுபவித்து வருகிறார். வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும், வாதி பெயரில் உள்ள கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி பெயரில் கந்தாய வரி வா.சா.ஆ.3 செலுத்தப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த அடங்கல் கணக்கு வாதி பெயரில் உள்ளது. அந்த அடங்கல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.5.) பிரதிவாதிக்கு காலை 187-ல் 3.85 ஏக்கரும், காலை 203-ல் 1.86 ஏக்கரும் செட்டில்மெண்ட் ஆவணப்படி பாத்தியமாகும். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.5 ஆகவும், பிரதிவாதி தரப்பில் அதே சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தானது ஆதியில் திருமலைசாமி மற்றும் அவரது மகனுக்கு பாகபிரிவினைபடி

பாத்தியப்பட்டதாகும். மேற்படி திருமலைசாமி மற்றும் அவரது மகன் ஆகியோர் பிரதிவாதியின் மகள் ஆர்த்திஸ்ரீ இளவராக இருந்த போது பிரதிவாதி இளவர் பெயரில் பி.சா.ஆ.2 ஆவணத்தின்படி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இளவர் உரிமை வயதை அடைந்தவுடன் சொத்தினை இந்த பிரதிவாதிக்கு கடந்த 30.03.2015 தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்.

5.6.) வண்டித்தட உரிமையை வாரி, மதகு கொப்பு வாய்க்கால் ஆகியவற்றின் நீடனுபவ உரிமையாக இந்திய வசதியுரிமை சட்டம் பிரிவு 15–ன்படி உரிமையுள்ளதாக வாதி உரிமை கோரியுள்ளார். அதே சமயம் பிரதிவாதி தன்னுடைய மகள் ஆர்த்திஸ்ரீ பெயருக்கு கடந்த 07.05.1999–ல் கிரையம் பெற்ற தேதியிலிருந்து 1, 2 மாதங்களுக்குள் காலை எண்.187, 203–ஐ சுற்றிலும் வேலி அமைத்துவிட்டதாக கூறப்பட்டுள்ளது. மேலும் கடந்த 23 வருடங்களுக்கு மேலாக மேற்படி பூமியை சுற்றிலும் வேலி அமைத்து பிரதிவாதி அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் வாதியின் குள பாசன வாய்காலையும் நிரவி வண்டிப்பாதையையும் தடுத்து கம்பி வேலி அமைத்து வாதிக்கு காலை எண்.203–ல் வழியில்லை என்று வாதியின் உரிமையை மறுப்பதாக வாதி தரப்பில் சேவூர் காவல் நிலையத்தில் கடந்த 15.06.2022 தேதியில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த புகாருக்கான மனு ஏற்பு ரசீது வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5.7.) வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை கவனமாக பரிசீலிக்கையில் காலை 203–ல் தென்புறத்தில் செல்லும் பாதை வழியாக சென்று வர வாதிக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் காலை 203–ஆனது பிரதிவாதிக்கு உரிமையானது ஆகும். பிரதிவாதி மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் தரப்பினர் அல்ல. வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு மூல ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதேசமயம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1, 2 ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில் காலை 203–ன் தென்புறத்தில் வண்டித்தடம் எதுவும் கிழமேலாக செல்வதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை. மேலும், வண்டத்தடத்தை பிரதிவாதி நிரவி விட்டதாக வா.சா.ஆ.6 புகார் மனு ஏற்பு ரசீதில் கூறப்பட்டுள்ளது. அதேசமயம் பிரதிவாதி தரப்பில் காலை 187, 203–ஐ சுற்றிலும் கடந்த 1999ம் வருடத்திலேயே வேலி அமைக்கப்பட்டு கடந்த 23 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் எதுவும் இரு தரப்பிலும் கோரப்படவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை தவிர காலை 203–ன் தென்புரத்தில் வண்டிப்பாதை கிழமேலாக செல்வதாக காண்பிக்க ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை.

5.8.) மேற்கண்ட சூழ்நிலையில் வாதிக்கு காலை 203–ன் தென்புறத்தில் வண்டித்தட உரிமை நீடனுபவ வசதியுரிமைப்படி உள்ளதா என்பதையும் காலை

203–ஐ சுற்றிலும் பிரதிவாதி கடந்த 1999 ம் வருடத்திலேயே வேலி அமைக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருகிறதா என்பதையும் இரு தரப்பு சாட்சிய விசாரணைகளுக்கு பிறகுதான் தெரியவரும். இந்த அசல் வழக்கின் வாதி காலை 203–ஐ சுற்றிலும் உள்ள வேலியை நீக்க செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். இந்நிலையில் வாதி கோரும் வழித்தடம் ஏற்கனவே கம்பிவேலியிட்டு அடைக்கப்பட்டுள்ளதால் வாதிக்கு ஆதரவாக இடைநிலை உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு முதல் தோற்ற வழக்கு மற்றும் வாய்ப்புகளின் சமநிலைமை எழவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 14.09.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.09.14 09:37:41 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை:–**

**மனுதாரர் தரப்பு ஆவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.02.2013 | கிரைய ஆவண எண்.2043/2013–ன் கணினி சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 22.06.2022 | நில உரிமை விவரங்கள் கணினி நகல் – பட்டா எண்.1144 |
| ம.சா.ஆ.3 | 10.12.2021 | சேவூர் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய ரசீது |
| ம.சா.ஆ.4 | 10.12.2021 | 1430–ம் பசலியின் உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 30.03.2015 | தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.3682/2015–ன் கணினி சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 15.06.2022 | சேவூர் காவல் நிலைய மனு ரசீது |
| ம.சா.ஆ.7 | | மாதிரி வரைப்படம் |

**எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 30.03.2015 | பிரதிவாதிக்கு அவரது மகள் ஆர்த்திஸ்ரீ எழுதிகொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.3682/2015–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 07.05.1999 | மைனர் ஆர்த்திஸ்ரீ–க்கு கார்டியனாக பிரதிவாதி பெற்ற கிரைய பத்திர எண்.1500/1999–ன் கணினி சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 05.01.2023 | நில உரிமை விவரங்கள் கணினி நகல் – பட்டா எண்.1424 |

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.09.14 09:37:48 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.570/2022
இன்
அ.வ.எண்.118/2022
சீரான/வரைவு உத்தரவு
நாள்.14.09.2023
மா.உ.நீ., அவிநாசி